Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசீய தினசரி National Tamil Daily

[illegible] 7 (18-12-65) இதழ் 309

விசுவாவசு மார்கழி 3 ஷஃபான் பிறை 24 சனிக்கிழமை

## ஈரவெங்காயமும் புளியும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகும் ஈரவெங்காயம் கொழும்பில் விலை குறைவாகவும் யாழ்ப்பாணத்தில் விலை அதிகமாகவும் விற்கப்படுகிறது. ஈரவெங்காயம் யாழ்ப்பாணத்தில் ஒரு றாத்தல் 45 முதல் 50 சதம் வரை விற்கப்படுகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் ஈரவெங்காயம் உற்பத்தி செய்யப்படுவதால் அதற்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. கொழும்பு மற்றும் தென் மாகாணத்தில் விலைக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு வியாபார நிலையங்கள் பலவற்றிலும் வைக்கப்பட்டுள்ள விலைப் பட்டியலில் ஈரவெங்காயத்தின் விலையும் குறிக்கப்பட்டிருப்பதால், தரகர்கள் விவசாயிகளிடத்தில் சென்று ஈரவெங்காயமும் கட்டுப்பாட்டு விலைக் குட்பட்டதெனக் கூறி மலிவு விலையில் வெங்காயத்தை வாங்கி அதிக விலைக்கு வியாபாரிகளுக்கு விற்பதாகப் புகார் கூறப்படுகிறது. ஈரவெங்காயம் இங்கு மலிவு விலையில் கிடைக்க வழி செய்யவேண்டும்; இல்லையேல் அதற்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட வேண்டும் என்று கோரி உதவி உணவுக் கட்டுப்

(6-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு

# மாநகரசபை தேர்தல் இன்று நடைபெறும்

## 45 வட்டாரங்களில் 118 பேர் போட்டி

### டாக்டர் என். எம். குற்றச்சாட்டு

கொழும்பு, வெள்ளி

டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தம் வெளியான நாள் முதல் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர்கள் அச்சம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள் என தெமட்டகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூறியதாக 'ஜனதா' பத்திரிகையில் ஓர் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தம், உண்மையான ஒப்பந்தமில்லாவிட்டால், திரு. டட்லி சேனநாயக்காவும் திரு. செல்வநாயகமும் சேர்ந்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கலாம் என்றும் டாக்டர் என். எம். பெரேரா கூறியதாக அச்செய்தி கூறுகிறது.

தனக்கும், திரு. செல்வநாயகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் இல்லை என்பது குறித்து ஒரு தெளிவான அறிக்கை வெளியிட திரு. டட்லி சேனநாயக்கா முன்வராதது வருந்தத்தக்கதென்றும் டாக்டர் பெரேரா பேசியதாக அச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மாநகரசபை 47 வட்டாரங்களுக்கான தேர்தல் இன்று நடைபெறும். இத்தேர்தலில் நகரத்திலுள்ள சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வாக்களிப்பார்கள்

எல்லா வட்டாரங்களிலும் 118 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். 45 பேர் ஐக்கியதேசிய கட்சி அபேட்சகர்களாகவும், 17 பேர் சமசமாஜக்கட்சி சார்பிலும், 13 பேர் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும், 10 பேர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலும், 3 பேர் மக்கள் ஐக்கியமுன்னணி சார்பிலும், 3 பேர் சமசமாஜக் கட்சி புரட்சி குழு சார்பிலும், 27 பேர் சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர்.

பதிவு செய்யப்பட்ட 2,73,200 வாக்காளர்களில் ஆகக் கூடுதலான வாக்காளர் ஆட்டுப்பட்டி வட்டாரத்தில் (6,056) பதிவு செய்யப்பட்டுள்ளனர். மற்றும் 23 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5,000 வாக்காளர்கள் உள்ளனர். மாளிகாவத்தை வட்டாரத்தில் ஆகக் குறைந்த வாக்காளர் (3,152) உள்ளனர்.

மொத்தம் 47 வட்டாரங்களிலும் 133 வாக்களிப்பு நிலையங்கள் இருக்கின்றன.

வாக்களிப்பு இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-30 மணிவரை நடைபெறும். தேர்தல் முடிவுகள் இன்று நள்ளிரவு 49 நிலையங்களிலிருந்து அறிவிக்கப்படும்.

புதிய தேர்தல் சட்டப்படி நடைபெறும் இத்தேர்தலில் கடந்த பொதுத் தேர்தலில் உபயோகிக்கப்பட்ட 'மை' பாவிக்கப்படும்.

இன்று காலை முதல் நகரம் முழுதும் சுமார் 2000 பொலிஸார் கடமையாற்றுவார்கள் என அறியப்படுகிறது. கொழும்பிலுள்ள முக்கிய பகுதிகளில் ஆயுதந்தாங்கிய பொலிஸார் கடமையாற்றுவார்களென்றும் அறியப்படுகிறது. பொலிஸார் ரோந்து சுற்றும் ஒழுங்குகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

## பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 3 வருட கடூழிய சிறை

### லஞ்சத்தடைச்சட்டத்தின் கீழ் நடந்த முதல் வழக்கில் தீர்ப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

குருநாகலையிலுள்ள டொரடேனியாவைச் சேர்ந்த கான்ஸ்டபிள் கே. எச். எம். ஹேமச்சந்திரா கருணரத்ன என்பவர் மீதான லஞ்சக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால், மாவட்ட நீதிபதி திரு. என்.ஏ. டி'எஸ். விஜயசேகரா, புதிய லஞ்சத்தடுப்பு சட்டத்தின்கீழ் அவருக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

கார் சாரதியான பி. பியசேன என்பவர் சம்பந்தப்பட்டிருந்த விபத்து வழக்கில் அவருக்குச் சாதகமாக அறிக்கை தயாரிக்குமாறு கோரப்பட்டு பியசேனவிடமிருந்து ரூபா 100 லஞ்சம் வாங்கியிருந்தாரென கருணரத்ன மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கருணரத்ன 1961-ம் வருடம் அக்டோபர் மாதத்தில் இந்த லஞ்சத்தைப் பெற்றிருந்தார்.

நீதிபதி தமது தீர்ப்பின் போது தற்போதுள்ள சூழ்நிலையில் லஞ்சக் குற்றச்சாட்டு பெரியதொரு குற்றச்சாட்டு என்றும் நாட்டின் சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய கான்ஸ்டபிள் தாம் பணிபுரியும் இலாகாவுக்கே மாசு ஏற்படுத்திவிட்டாரென்றும் எடுத்துக் கூறினார்.

லஞ்சக்குற்றச்சாட்டுக்கு தண்டனை கடுமையாக இருக்கவேண்டுமென சட்டம் கூறுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கருணரத்னவுக்கு 10 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

### பிரதமர் மீது 'அத்த' குற்றச்சட்டு

பம்பலப்பிட்டி, வெள்ளி

மக்களின் வாக்குரிமையால் திரு. டட்லிசேனநாயக்கா பிரதமராக வரவில்லையென்றும், திரு. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தம் மூலமே அவர் பிரதமரானார் என்றும் பஞ்சிகாவத்தையில் நடைபெற்ற ஒரு தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் களனி எம். பி. திரு. ஆர். எல். பெரேரா கூறியதாக 'அத்த' பத்திரிகையில் செய்தி வெளி வந்துள்ளது.

நாட்டின் பிரச்னைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்தாமல் பிரதமர் பதவியைப் பாதுகாப்பதில் அவர் அதிக சிரத்தை எடுத்து வருவதாகவும் திரு பெரேரா கூறியதாகவும் அச்செய்தி கூறுகிறது.

### தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு
22 L 0099 - ரூ. 62,320

2-ம் பரிசு:
10 P 0307 - ரூ. 24,928

3-ம் பரிசு:
26 L 0041 - ரூ. 6,232

(2-ம் பக்கம் பார்க்க)

### நீதிபதி வீட்டில் துணிகரத்திருட்டு!

பலப்பிட்டியா, வெள்ளி

பம்பலப்பிட்டி மாவட்ட நீதிபதி திரு. ஏ. டி. ஜே. குணவர்த்தன வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு திருடர்கள் புகுந்து, 80 ரூபாவையும் பவுண்டன் பேனவையும் திருடிச் சென்றுவிட்டனர். சம்பவம் நடந்த சமயம் நீதிபதி நித்திரை செய்துகொண்டிருந்தார்.

அதே இரவு தனதுமனைவியின் ஆறு வளையல்களைக் காணவில்லையென பலப்பிட்டியா வழக்கறிஞர் திரு. ரி. டீ. எஸ். அமரசேகரா பொலிசாருக்கு புகார் செய்துள்ளார்.

## வெளிமாகாண ஆசிரியர் இங்கு வேண்டாமாம்

### வடஇலங்கை தமிழாசிரியர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கம் தனது பதினெரு கிளைகளும் நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில் நேற்று முன்தினம் பின்வரும் தீர்மானங்களை, ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாக நிறைவேற்றியது.

**தீர்மானங்கள்**

1. 1-10-60க்கு முன்னர் நியமனம்பெற்ற வட மாகாணத்திலுள்ள சுவீகரித்த பாடசாலை ஆசிரியர்களை வெளிமாகாணங்கட்கு மாற்றுதல் கூடாது. (1956-க்கு முன்னர் நியமனம்பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கட்குச் சிங்கள மொழிச்சட்டம் செல்லாததென்று திட்டம் வகுத்தது போல 1-10-60க்கு முன்னர் முகாமையின்கீழ் நியமனம் பெற்றவர்கட்கும் மாற்றமிருக்கக்கூடாது.

'பாடசாலைகளைச் சுவீகரிக்கும்போது முகாமையை மாத்திரமே மாற்றுகிறோம், என்று கொடுத்த நம்பிக்கைக்கும் இது பொருத்தமானது).

2. வெளிமாகாணங்களில் தமிழ் ஆசிரியர் பற்றாக் குறையிருக்கும் இன்றைய நிலையில் வெளிமாகாணங்களிலிருந்து எக்காரணம்கொண்டும் வடமாகாணத்திற்கு ஆசிரியர்களை மாற்றுதல் கூடாது.

3. வெளிமாகாணங்களில் தற்போதிருக்கும் பற்றாக் குறையை—

(அ) ஆசிரிய கலாசாலையிலிருந்து 1965-ல் வெளியேறும் 125 பேரினுலும்,

(ஆ) 1-10-60-ல் பாடசாலைகளைச் சுவீகரித்த பின்னர் யாழ். மாவட்டத்தில் நியமனம்பெற்ற சுமார் 100 பேரினுலும்,

(இ) 1-10.60க்குப் பின்னர் வெளியூர்களிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு முறையானமாற்றத்திட்டத்தின்கீழ் வந்தவர்களை நீக்கி, முறையற்ற வழிகளில் நுழைக்கப்பட்டவர்களினுலும் சீர் செய்க.

4. தற்போது யாழ். மாவட்டத்தில் மேலதிகமாக 350 ஆசிரியர் வரை உளர் எனச் சொல்லப்படுகிறது, இதில்

(அ) ஆசிரிய கலாசாலைகட்கு 1966-ல் 126 பேர் வரை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஆ) 1-10-60ச்குப் பின்னர் யாழ். த. மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதிய பாடசாலைகள் மூலம் நியமனம் பெற்றோர் சுமார் 100 பேர் வெளிமாகாணத்திற்கு செல்லுதற்குரியர்.

(இ) சராசரி அடிப்படையில் நியமனம் பெருத 100 மாணவ ஆசிரியருளர்.

(ஈ) 1966 ஜனவரியில் புதிய மாணவர்கள் சேர்க்கப்பட விருப்பவர்களையும் கொண்டு சீர் செய்யலாம்.

5. சுவீகரிந்த பாடசாலை ஆசிரியர்கட்கு அரசினர் பாடசாலை ஆசிரியர்கட்குரிய பரிபூரண உரிமைகள் கிடைக்கும் வரையும் கலந்து மாற்ற வேண்டாம். 1-10-60-ற்குப் பிறகு நடைபெற்றுள்ள கலந்து மாற்றங்களையும் உடனடியாகச் சீர் செய்க.

### மகாதேசாதிபதியை அழைக்க முடிவு

சுழிபுரம், வெள்ளி

யாழ். பிரதேச கலாமன்றத்தினர் விரைவில் நடாத்தவிருக்கும் கைப்பணிப் பொருட் காட்சியைத் திறந்து வைப்பதற்கு மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லவாவை அழைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

### பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் வள்ளுவர் கலாமன்றத்தினர் நடாத்திய நாவலர் பேச்சுப்போட்டி முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு: செல்வி எஸ். ஜெயகுமாரி, செங்குந்த இந்துக்கல்லூரி, நல்லூர். செல்வன் செ. நாகேந்திரராஜா, சாதன பாடசாலை, நல்லூர்.

கீழ்ப்பிரிவு: செல்வன் இ. இராஜேஸ்வரன், அரசினர் மகாவித்தியாலயம், கோப்பாய். செல்வன் மா. கிருபானந்தன், கந்தவேள் வித்தியாசாலை, கோப்பாய். செல்வன் மா. முருகானந்தன், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

### சாஸ்திரி பர்மா புறப்பட்டார்

புதுடில்லி, டிச. 17

இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி பர்மியத் தலைவர் நீவின்டனுன் பேச்சு நடத்தும் பொருட்டு, இன்று காலை நங்கூன் புறப்பட்டார்.

நாடு ஒரு சிரமமான கட்டத்தில் இருக்கிறதென்றும் பாகிஸ்தான் அபாயமும், சீனத் தாக்குதல் அபாயமும் இருப்பதாக அவர் அதற்கு முன் கூறினர்.

''ஜனதிபதி அயூபின் ஐ. நா. பேச்சு அவர் சமாதானத்தை விரும்புவதாகக் காட்டவில்லை. டாஷ்கண்டில் அவருடன் நடைபெறும் பேச்சில் நிலைமை சீரடையும் என நம்புகிறேன்'' என்றூர் சாஸ்திரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

இன்றைய நிலைபற்றி கவனி. அதுவே முக்கியம் போனதுபற்றியோ, வருவதுகுறித்தோ சிந்திக்க வேண்டாம். அப்போதுதான் கவலை. பீதி இல்லாமல் வாழமுடியும். இதனால் ஆயுளும் நீடிக்கும்.

— சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 387

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆ[illegible] மார்கழி 3 (18-12-65)

# இனவேற்றுமை ஒழிப்பு

இனவேற்றுமையை உலக முழுவதிலும் தடை செய்வதற்கான நகல் பிரகடனமொன்றை ஐ. நா. மகாசபையின் சமூகக் கமிட்டி எதிர்ப்பின்றி நிறைவேற்றியுள்ளது. இந்த நகல் தீர்மானம் இனி ஐ. நா. மகாசபையின் அங்கீகாரத்தையும் எதிர்ப்பின்றிப் பெற்றுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது இத்தீர்மானத்தை உலகநாடுகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளுமென நம்பலாம்.

இத்தீர்மானத்துக்கு தென்னுபிரிக்காவும் மற்றும் 29 நாடுகளும் ஆதரித்து வாக்களிக்கவில்லை. இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னுபிரிக்கா இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்காதது ஆச்சரியமல்ல. இதைஆதரித்து வாக்களித்த நாடுகளில் இனப்பாகுபாடோ, இன ஒதுக்கலோமுற்ருகஇல்லையென்று கூறிவிடமுடியாது. பல்வேறு நாடுகளிலும் இனவேற்றுமை ஒவ்வொரு உருவத்தில் இடம் பெற்றுள்ளன. ஜனநாயகம் என்ற பெயரில் உலக நாடுகள் பலவற்றில் சிறுபான்மை இனத்தவர் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயத்தை எவரிடமும் எடுத்துச் சொல்லி நிவாரணம் பெறமுடியாத துர்ப்பாக்கிய நிலையில் அவர்கள் உள்ளனர். இலங்கையுட்பட பல நாடுகளில் ஜனநாயகம் என்னும் பெயரில், பெரும்பான்மைப் பலத்தினுல் சிறுபான்மையினருக்கெதிரான பாரபட்சமான சட்டங்கள் இயற்றப்பட்டதுடன் நிர்வாக ரீதியிலும் பாகுபாடு காட்டப்பட்டுவந்துள்ளது. ஆனுல் இந்த அநீதியை ஐ. நா. ஸ்தாபனத்துக்கு எடுத்துக்கூறி நிவாரணம் பெறுவதற்கு 'உள்நாட்டுப் பிரச்னைகளில் தலையிடக்கூடாது'' என்ற ஐ. நா. அமைப்பு விதி தடையாக உள்ளது.

ஐ. நா. மனித உரிமை சாஸனம் உலகநாடுகளின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளபோதிலும் அதை எல்லா நாடுகளும் சரிவரப் பின்பற்றவில்லை மனித உரிமைச் சாஸனத்துக்கு மாருக, அடிப்படை உரிமைகளையே மறுக்கும் சட்டங்கள் இலங்கையிலும் இதர பல நாடுகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. நிர்வாக ரீதியிலும் மனித உரிமைக்கு மாருன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தைப் போன்று உலகில் இனவேற்றுமையை ஒழிப்பதற்கான இந்தத்தீர்மானமும் பயனற்றுப் போகக்கூடாது. மனித உரிமைச் சாஸனத்தின் அடிப்படையிலும் இனவேற்றுமை ஒழிப்புத்தீர்மானத்தின் அடிப்படையிலும் ஐ. நா. அங்கத்துவநாடுகளின் அரசியல் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட ஐ. நா. ஸ்தாபனமே முயற்சி செய்யவேண்டும். இனவேற்றுமையை உலகிலிருந்து ஒழிக்கவேண்டுமாயின், இனவேற்றுமை உலகில் எந்தச் சிறிய நாட்டில் காண்பிக்கப்பட்டாலும் அதை ஆராய்ந்து அவற்றை நீக்க ஐ. நா. வில் ஒரு கமிட்டியே இயங்கவேண்டியது அவசியம் உள்நாட்டுப் பிரச்னையில் தலையிடுவதில்லையென்ற விதி இருக்கும்வரை வெறும் தீர்மானங்களை நிறைவேற்றுவதால் உலகில் இனவேற்றுமையை ஒழித்துக்கட்டுவது சுலபமல்ல. என்ருலும் இதற்கென ஒரு தனிக்குழு இருப்பின் அந்தந்த அரசாங்கங்களுடன் தொடர்புகொண்டாவது இனவேற்றுமைப் பிரச்னையை நீக்க முயற்சிசெய்யலாம்.

## விண்வெளிச் சாதனை

விண்வெளிப் பயணத்தில் அமெரிக்கா மற்ருெரு சாதனையை ஏற்படுத்தி பாராட்டுப் பெற்றுள்ளது. சந்திரமண்டலத்துக்கு மனிதன் செல்வதற்கான முயற்சியில் அமெரிக்கா முன்னேறியுள்ளதையே இப் புதிய சாதனை காட்டுகிறது. இரண்டு விண்வெளிக் கப்பல்கள் நான்கு வான்வெளிவீரர்களை ஏற்றிக்கொண்டு விண்வெளியில் உலகைச் சுற்றிவந்தது மட்டுமல்ல இரண்டுவிண்வெளிக் கப்பல்களும் எங்கள் வீதிகளில் மோட்டார்கள் போவது போல் ஒன்றையொன்று பத்தடி இடைவெளியில் பிரயாணம் செய்து ஒரு கப்பலில் இருந்தவர்கள் மற்றக் கப்பலில் இருந்தவர்களைப் பார்த்து தமாஷாகப் பேசியுமிருக்கின்றனர். அமெரிக்காவின் இப்புதிய சாதனையைக் கண்டு நாமும் பெருமை கொள்கிறோம். அந்தவிண்வெளி வீரர்களுக்கு நாமும் எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

''இந்த விண்வெளிச் சாதனை அமெரிக்காவுக்கு மட்டும் உரியதல்ல. மனிதகுலம் முழுவதற்கும் கிடைத்த வெற்றி'' என்று அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்ஸன் அமெரிக்க விண்வெளி நிர்வாகக் கழகத் தலைவருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார். உண்மைதான். இதுமனிதனின் வெற்றியே. விண்வெளிச் சாதனை பாராட்டுக்குரியது. அதேசமயம் உலகில் நிம்மதியாக சமாதானமாக வாழவே மனிதகுலம் விரும்புகிறது என்பதும்உண்மைவிண்வெளி சாதனைகள், மனிதன் அமெரிக்காவில் வாழ்ந்தாலும் சரி வியட்நாமில் வாழ்ந்தாலும் சரி சுதந்திரமாகவும் சமாதானமாகவும் நிம்மதியாகவும் வாழ உதவி புரிவதாக இருக்க[illegible]டும் என்பதே [illegible]மது பிரார்த்தனை

## களத்து மேடு

போன வருடம் ஏமாற்றிவிட்டு ஓடிய மழை இவ்வருடம் காலம் தவருமல் ஒழுங்காகப் பெய்து கொடுத்து நெற்பயிரை வளர்த்து வருவதையிட்டு கமக்காரர் பூரிப்படைந்திருக்கிருர்கள். யாழ்ப்பாணத்திலும் வன்னி நாட்டிலும் கிழக்கு மாகாணத்திலும் வேளாண்மை செழித்து வருகிறது. இதுவரை வெள்ளத்தாலோ, காற்றினுலோ, வரட்சியினுலோ குறிப்பிடத்தக்க சேதம் எதுவும் நெல்வயல்களுக்கு உண்டாகவில்லை. வட்டைகளில் கணிசமான வெள்ளம் நின்று பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கின்றது. இப்படியேயிருந்து இயற்கைக் கோளாறுகள் எதுவுமின்றி, பயிர் முற்றி வரும் சமயத்தில் [illegible]னுமொரு நல்லமழை பெய்துவிட்டால் வேளாண்மை முதல்தரமாகப் போய்விடும் சென்ற வருடம் விளைச்சல் இல்லாமல் விதை நெல்லுக்கே திண்டாடியவர்கள் இதையிட்டு இறைவனுக்கு வணக்கம் செலுத்துவார்கள்.

நெல்வயல்களில் இப்பொழுது களைபிடுங்கும் வேலை நடந்து வருகிறது. இதற்கு அநேகமாக பெண்களே அமர்த்தப்படுகிருர்கள். ஆண்கள் இந்த வேலையைச் செய்வதாயிருந்தால் அவர்களுக்குச்சம்பளம்கொடுத்துக் கட்டாது. பெண்கள்கூட தொடக்கத்தில் நாளொன்றுக்கு ஒன்றரை ரூபாய் வாங்கியவர்கள், களைபிடுங்குவதற்குக் கிராக்கி அதிகமாகிவர, தங்கள் சம்பளத்தை ஒன்றேமுக்கால் ரூபாயாக்கி இப்பொழுது சில இடங்களில் இரண்டு ரூபாயும் கோருகிருர்கள். ஒரு பரப்பு வயலில களைபிடுங்க எட்டு முதல் பத்து ரூபாய்வரை பிடிக்குமாதலால் இந்தச் செலவுத்தானத்துக்கு அஞ்சி சிலர் களை பிடுங்காமலே விட்டு விடுகிருர்கள். இதனுல் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படும் என்ற உண்மை எல்லோரும் அறிந்ததே.

வன்னிப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் ஏக்கர் கணக்கில் கமம்செய்கிறவர்கள் களையே பிடுங்குவதில்லை. அவ்விடங்களில் கூலியாட்கள் கிடைப்பதும் அருமை. கிடைத்தாலும் எத்தனை ரூபாய்களைக் கொட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது?

களைபிடுங்க வேண்டிய இந்த நிர்ப்பந்தம் எங்கள் செய்கைமுறையால் உண்டாகின்றது. அதை நிவர்த்திக்க வழி இருக்கிறது. இதுபற்றி அரசாங்க விவசாய போதனுசிரியர்கள் எவ்வளவு புத்திமதி கூறினுலும் கமக்காரர் அசட்டை செய்துவிடுகிருர்கள்.

மின்னேரி முதலிய இடங்களில் ஜப்பானிய முறைப்படி கமம் செய்யப்படுவதால் அங்கே இந்தச் சிரமம் இல்லை. விளைச்சலும் அங்குதான் அதிகம். அவ்விடங்களில் நாற்றுமேடை போட்டுப் பயிர் செய்கிருர்கள். மேடையில் பயிர் வளர்ந்துவரும்போதே வயல்கள் பண்படுத்தப்படுகின்றன. புல் வளர்ந்திருக்கும் நிலத்தை நன்ருகச் சேருடி மட்டைக் கலப்பை போட்டு தாழியடித்து விடுகிருர்கள். புல்பூண்டு யாவும் இதனுல் செத்து மண்ணேடு மண் கலந்துவிடுகின்றது. இதற்குப்பின் துப்புரவான அந்த நிலத்தில் மேடையிலிருக்கும் நாற்றுகளைப் பிடுங்கி ஈவுசோவாக நட்டுவிடுகிருர்கள். இப்படிச் செய்வதால் புல் பூண்டுகளின் நெருக்கம் [illegible] யும்விட்டு ஓங்கி செழிப்பாக வளர்கின்றது. நல்ல விளைச்சல் தருவதற்கு வேறென்ன வேண்டும்?

இதைச் சுட்டிக்காட்டியவுடனே 'எங்கள் ஊரில் அதுபோன்று நீர்வசதியும் ஈரலிப்பும் இல்லையே!' என்று யாழ்ப்பாணத்து கமக்காரர் கூறி விடுவார்கள். அவ்விடங்களில் அடிக்கடி மழை பெய்து தண்ணீர் வசதி இருப்பது உண்மைதான். யாழ்ப்பாணத்தில் அந்த நன்மை இல்லை என்பதை உணர்ந்துதான் முன்னிருந்தவர்கள் நெல்வயல்களின் மத்தியிலும் ஏராளமான கிணறுகளைத் தோண்டி வைத்திருந்தார்கள். இன்று அந்தக் கிணறுகள் பார் இடிந்து பாழ்ங்கிணறுகளாய் போவது எதனுல்? அவற்றைப் பாவிக்காமல் விட்டதனுல் அல்லவா?

இந்தக் கிணறுகளை உபயோகித்து, ஆவணி, புரட்டாதியிலேயேநாற்றுமேடை போட்டு, வயல்களை நன்ருக உழுது பண்படுத்தி வைத்திருந்து, மழை வரும்பொழுது நாற்றுகளைப் பிடுங்கி வயல்களில் நட்டுவிட்டால், களைகள் அதிகம் வளரமாட்டாது. விளைச்சலும் அதிகரிக்கும்.

நாற்றுமேடை போட்டால் ஆடு, மாடுகள் அவற்றை அழித்துவிடும் என்று சிலர் நியாயம் காட்டக்கூடும். ஊர் ஒத்தபடி எல்லோரும் நாற்று மேடை போட்டால் ஆடு மாடுகளை ஏன் அவிழ்த்து விடப்போகிருர்கள்! அப்படித்தான் செய்தாலும்அதற்குத்தடை விதிக்க அரசாங்கம் இல்லையா?

-கலப்பை

## தேசிய சுவீப் . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தலா ரூபா 311,60 பெறும் 100 டிக்கெட் விபரம்:-

| | |
|---|---|
| 22 X 0037 | 13 W 0304 |
| 02 R 0858 | 17 S 0566 |
| 09 D 0511 | 04 M 0413 |
| 10 M 0037 | 06 H 0183 |
| 12 M 0113 | 07 C 0199 |
| 15 R 0019 | 07 W 0209 |
| 16 E 0520 | 14 J 0300 |
| 19 Z 0157 | 25 P 0208 |
| 04 V 0910 | 09 Y 0394 |
| 03 R 0420 | 04 M 0148 |
| 26 S 0030 | 05 Y 0880 |
| 04 Q 0015 | 22 U 0051 |
| 20 S 0509 | 06 V 0160 |
| 02 O 0568 | 18 T 0130 |
| 15 V 0825 | 24 F 0691 |
| 25 P 0201 | 05 N 0607 |
| 10 F 0931 | 14 W 0907 |
| 17 V 0359 | 19 C 0877 |
| 10 B 0242 | 12 S 0992 |
| 06 U 0611 | 04 Z 0455 |
| 12 H 0133 | 24 S 0327 |
| 06 M 0072 | 18 T 0720 |
| 08 N 0621 | 06 B 0945 |
| 02 A 0791 | 10 L 0328 |
| 08 K 0019 | 10 Y 0109 |
| 23 Q 0036 | 12 B 0516 |
| 12 V 0012 | 16 N 0658 |
| 23 C 0550 | 02 R 0019 |
| 14 S 0122 | 22 X 0594 |
| 19 U 0799 | 24 Z 0162 |
| 24 E 0847 | 14 T 0304 |
| 04 F 0469 | 20 H 0266 |
| 04 T 0180 | 09 Q 0355 |
| 07 Q 0214 | 18 N 0339 |
| 20 G 0853 | 18 Q 0456 |
| 16 V 0639 | 10 A 0763 |
| 21 J 0511 | 01 J 0710 |
| 16 G 0949 | 07 W 0714 |
| 07 O 0229 | 11 E 0025 |
| 11 C 0702 | 22 Z 0050 |
| 16 P 0001 | 23 V 0919 |
| 20 B 0055 | 20 R 0137 |
| 05 L 0986 | 24 N 0299 |
| 13 H 0061 | 20 D 0948 |
| 01 J 0530 | 14 B 0066 |
| 16 S 0154 | 25 M 0155 |
| 11 T 0188 | 04 J 0277 |
| 03 B 0842 | 19 R 0521 |
| 05 S 0166 | 03 X 0379 |
| 08 R 0710 | 21 C 0872 |

# ஐயாறன் எழுதுவது

இரவிலே நல்ல தூக்கம் கிடையாது. கொசு உபத்திரவம் தாங்கவில்லை. உங்கள் வீட்டில் கொசு உண்டா என்று பல அன்பர்களைக்கேட்டேன். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, கொழும்பு முதலிய எல்லா இடங்களிலும் கொசுக்களைப் பற்றிப் பெரும்புகார் தெரிவித்தனர்.

கொசுவை விரட்டுவதற்காக மின்வசதியை இராவெல்லாம் பாவிக்கவேண்டியிருப்பதாகச் சொன்னுர் ஓர் அன்பர். விசிறி சற்றே நின்றுவிட்டால், இந்தியாவின் ''நாட்'' விமானங்களைப் போல் பல திசைகளிலிருந்தும் 'ரீம்'கார சப்தத்துடனே வந்து தாக்கி, நம் இரத்தத்தை உறிஞ்சி, அந்த இடமெல்லாம் தடித்து, அம்மை வார்த்ததுபோல் ஆகிவிடுவதாகச் சொன்னுர் அவர்.

ஃ ஃ ஃ

கொசுவைப்பற்றி ஒரு வேடிக்கைப் பாட்டுண்டு. ''கொசுவெல்லாம் கூடிக்கிட்டு கும்பகோணம் போவையிலே, கும்பகோணத்து சுங்கக்காரன் கொசுவுக்கு அரைப் பணம் வாங்கிவிட்டான்'' என்று அந்தப்பாட்டு. கும்பகோணம் கொசு அவ்வளவு பிரசித்தம். அங்கு அந்தக் கொசுவால் யானைக்கால் அதிகம். யானைக்கால், யானைக்கைக்காரரெல்லாம் சேர்ந்து நகரில் ஊர்வலம் வந்து கிளர்ச்சி செய்து, கொசுவை எதிர்த்து போர் தொடுக்கவேண்டுமென்று பலமாக ஆட்சேபித்தனர்.

ஒரு பிரபல டாக்டர், நகரசபைத் தலைவரானுர். முதல்வேலையாக கொசு ஒழிப்புத் திட்டம் போட்டு, இதைப்பற்றி ஆராய்ச்சிசெய்து, விசேஷ மருந்துகளை வரவழைத்து ஊரெல்லாம் தொடர்ந்து தெளிக்கச்செய்தார். பொது மக்களும் ஒத்துழைக்க சில மாதங்களில் அங்கு கொசுக்களே இல்லாதுபோயிற்று. சில மாதங்களுக்குமுன் கும்பகோணம் சென்று பார்த்தேன். கொசுக்கள் இல்லாததுடன், ஒரு யானைக்காலும் என் கண்ணில் படவில்லை.

அதைப்பற்றி நம் சுகாதார அதிகாரிகள் விசாரித்து, ஒரு திட்டத்தைத் தயாரித்து யாழ்ப்பாணம் உள்ளிட்டு இலங்கை எங்கும் நிறைவேற்ற முடியாதா?

அழுக்குத்தண்ணீர்தேங்குவதால் தான் கொசுக்கள் உற்பத்தியாவதாயும், அதனுல் பல வியாதிகளும் வருவதாயும் சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். மக்கள் தங்கள் வீடுகளிலும் சுற்றுப்புறத்திலும் அவ்விதம் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளக் கூடாதா! மக்கள் இப்படி ஒத்துழைத்தால்தான் இந்தக் கொசுத் தொல்லையை ஒழித்துக்கட்டமுடியும்.

கொசு மிகவும் அற்ப பிராணி. தட்டினுல் நசுங்கிவிடும்; ஆனுல் அதுசெய்யும் உபத்திரவமோ . . . . !

ஃ ஃ ஃ

'ஆனந்தவிகடன்' சஞ்சிகையில் கொசுவைப்பற்றி ஒரு வேடிக்கைப்படம் பார்த்தேன். கொசுவுக்கு அஞ்சி ஒருவர் கொசுவலை கட்டிக்கொண்டு படுத்திருக்கிருர். எப்படியோ கொசுக்கள் வலைக்குள் படைபடையாகச்சென்று தாக்குகின்றன சகிக்கமுடியாமல், வலைக்கு வெளியே எட்டிப் பார்த்தார். கொசுக்கள் கடிக்கவில்லை. உடனே

(6-ம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு பாகிஸ்தான் புயலில் 25,000பேர் மாண்டதாக மதிப்பீடு

## நூற்றுக்கணக்கான கரையோர தீவுகள் பாழடைந்துவிட்டன

டாக்கா, டிச. 17

கிழக்கு பாகிஸ்தான் புயலில் சுமார் 25000 பேர் மாண்டிருப்பதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் கூறுகின்றன.

மணிக்கு 100 மைல் வேகத்தில் சிட்டகாங்கிலும், கோக்ஸ்பஸாரிலும் வீசிய புயல், கடல் கொந்தளிப்பு, பேரலைகள் காரணமாக நூற்றுக்கணக்கான கரையோரத் தீவுகள் பாழடைந்துவிட்டன. உயிரிழந்தோரில் பெரும்பாலோர் மீனவர்கள் என அறிவிக்கப்பட்டது.

கோக்ஸ்பஸார் முற்ருகப் பாழடைந்துவிட்டது.

பாழடைந்த பகுதிகளுக்கும், நாட்டின் இதரபகுதிகளுக்கும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டதால் சரியான சேதவிபரம் இன்னும் தெரியவில்லை என கிழக்கு பாகிஸ்தான் மந்திரியொருவர் தெரிவித்தார்.

பிரேதங்களைத் தேடி மீட்கும் வேலை இப்போது நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டில் பாகிஸ்தானில் ஏற்பட்ட இரண்டாவது புயல் இது. கடந்த மேமாதம் அங்கு ஏற்பட்ட புயலில் 17000 பேர் மாண்டனர்.

புயலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்து இந்திய அதிபர் ராதாகிருஷ்ணன், பாகிஸ்தான் அதிபருக்குச் செய்தி அனுப்பியிருக்கிருர்.

புயலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்க அமெரிக்கா 25,000 டாலரை உடனடியாக அளித்திருக்கிறது.

## "ஜோன்ஸன் - அயூப் பேச்சில் உருப்படியான பலன் இல்லை"

### அமெரிக்க பத்திரிகைகள் கருத்து

வாஷிங்டன், டிச. 18

காஷ்மீர் சம்பந்தமாக பாகிஸ்தானை ஆதரிப்பது, பொருளாதார, ராணுவ உதவியை மீண்டும் துவக்குவது ஆகிய விஷயங்களில் எல்வித உறுதியும் பெருமலே பாகிஸ்தான் அதிபர் நாடு திரும்புவதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்காவுக்கும்பாகிஸ்தானுக்குமிடையேயான பிரதான பிரச்னைகள் எதுவுமே தீர்க்கப்படவில்லை என்றும், சீன-பாகிஸ்தான் நட்புறவு, வியட்னும், பாகிதானுக்கு ஆயுத, பொருளாதார உதவி ஆகியவற்றில் உடன்பாடு ஏற்பட்டதாகத்தெரியவில்லை எனவும் இச்செய்திகள் மேலும் கூறின.

பரஸ்பரம் இரு நாடுகளும் தன் கருத்துக்களை மற்றவருக்குப் புரியும்படி செய்ததொன்றே இப்பேச்சினுல் ஏற்பட்ட பலன் எனக்கூறப்படுகிறது.

இடு நாடுகளுக்குமிடையே மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த தொடர்பு மார்க்கம் மட்டுமே திறக்கப்பட்டிருக்கிறதெனஅமெரிக்கப்பத்திரிகைகள் அயூப்-ஜோன்ஸன் பேச்சுப் பற்றிக் குறிப்பிட்டன.

இந்தோ-பாகிஸ்தான் பிரச்னைகளை அமைதி வழியில் தீர்க்க இரு தலைவர்களும் ஒப்புக்கொண்ட போதிலும், காஷ்மீர் பிரச்னை பற்றித் திட்டவட்டமாக எதுவும் உத்தரவாதம் பெற திரு. அயூப்பினுல் முடியவில்லை என்றும், உறுதி இல்லாமல் அவர் திரும்புகிருர் என்றும் 'நியுயோர்க் டைம்ஸ்' பத்திரிகை கூறியது.

பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு வெறும் 'காகிதத் தோழன்' மட்டுமே என்பதை உணருவதில் வாஷிங்டனில் எவரும் தவறமாட்டார்கள் என 'சிக்காக்கோ டெய்லி நியூஸ்' கூறியது.

முழு உடன்பாடின்றிப் பேச்சு முடிந்ததாகவும், பாகிஸ்தான் அதிபர் எதையும் தீர்க்கத் தவறிவிட்டாரென்றும் வாஷிங்டன் போஸ்ட் கூறியது.

எவ்விதப் பலனும் இப்பேச்சில் கிட்டவில்லை எனத் தோன்றுவதாய் வாஷிங்டனிலுள்ள பி. பி. ஸி. நிருபர் கூறுகிருர். அரசியல் உறவை அபிவிருத்திசெய்வதேஉதவி அளிப்பதற்கு முன் செய்யப்படவேண்டிய காரியம் என வெள்ளைமாளிகை அதிகாரி விடுத்த அறிக்கையை அவர் சுட்டிக்காட்டியிருக்கிருர். இந்தியா-பாகிஸ்தான் உறவு இதில் அடங்கும் என மேலும் அவர் கூறியிருக்கிருர்.

ஜனதிபதி அயூப்கானிடம் அமெரிக்க ஜனதிபதி மிகக் கண்டிப்புடன் பேசியதாயும், முக்கியமாக பாகிஸ்தான்-சீன நட்புறவு, இந்தியாவுக்கு அபாயமானது என அவர் உறுதியுடன் எடுத்துக் காட்டியதாயும், இது ஆசியாவின் அமைதிக்குக் குந்தகமானது என்று அவர் குறிப்பிட்டதாயும் கூறப்படுகிறது

வியட்னும் விஷயத்தில் தன்கொள்கையை மாற்ற ஜனதிபதி அயூப் சிறிதும் தயாராய் இல்லை என்றும், இதனுல் சீனுவின் கோபத்துக்கு ஆளாகவேண்டும்என அவர் உறுதியுடன் தெரிவித்ததாயும் மேலும் கூறப்பட்டது.

ஜனதிபதி அயூப் தாயகம் திரும்பும் வழியில், மேற்கு

## அமெரிக்க எதிர்ப்பு மகாநாடு

ஹவாஞ, டிச. 17

மாபெரும் அமெரிக்க எதிர்ப்பு மகாநாடு ஒன்றைக் கூட்ட கியூபா ஆயத்தம் செய்துவருகிறது.

ஆசியா, ஆபிரிக்கா லத்தீன் அமெரிக்கா ஆகிய கண்டங்களின் 100 நாடுகளிலிருந்து சுமார் 500 பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் பங்குபற்றுவார்கள்.

வருகிற ஜனவரி 3-ம் திகதி முதல் 10-ம் திகதி வரை இம்மகாநாடு நடைபெறும். ஆசிய-ஆபிரிக்கப் பிரதிநிதிகளுடன் லத்தீன் அமெரிக்கப் பிரதிநிதிகள் ஒன்று சேர்வது இதுவே முதல்தடவையாக இருக்கும்

பி. டி. ஸி.

இந்தோ - பாகிஸ்தான்

## மேலும் 3 மாதத்துக்கு மேற்பார்வையாளர்

நியுயோர்க், டிச. 17

இந்தோ — பாகிஸ்தான் போர்நிறுத்த மேற்பார்வையாளர்களின் பதவிக்காலம் மேலும் 3 மாதம் நீடிக்கப்படவேண்டும் என யுதாண்ட் பாதுகாப்பு சபைக்கு சமர்ப்பித்த அறிக்கையில் கூறியிருக்கிருர்.

வருகிற புதன்கிழமையுடன் இந்தப் பார்வையாளர்களின் அலுவல் முடிவுக்குவருகிறது.

படைவிளக்கம் பற்றிய தனது அதிகாரியான ஜெனரல் மொராம்பியோஅடுத்த ஆண்டு ஜனவரிமாதம்வரை நீடிக்கவேண்டுமென யுதாண்ட் கேட்டிருக்கிருர்.

1966-ம் ஆண்டுவரை காஷ்மீரில் ஐ. நா. போர் நிறுத்தமேற்பார்வையாளர்கள் நீடிக்கவேண்டும் என யுதாண்ட் மேலும் கூறியுள்ளார். கடந்த 17 ஆண்டுகளாக இவர்கள் காஷ்மீரில் இருந்துவருகிருர்கள்.

## இந்தோனேஷிய நிலைமை

ஜாகர்த்தா, டிச. 17

இந்தோனேஷியாவின் பாலிதீவில் மதவாதிகளுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே ஏற்பட்டசண்டையில் 1000 க்கதிகமான கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் புரட்சியில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்பட்ட 3 உயர்தர ராணுவ அதிகாரிகளை, அரசாங்கத் துருப்புக்கள் சுட்டுக்கொன்றதாயும் அறிவிக்கப்பட்டது.

இந்தோனேஷியாவில் உணவுப்பொருள் உட்பட சகல அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தையும் அரசாங்கமே மேற்கொண்டிருக்கிறது.

ரூபயாநாணயத்தின்மதிப்பு குறைக்கப்பட்டதைத்தொடர்ந்து கடந்த சில நாட்களாக வர்த்தகம் சரியாக நடைபெறவில்லை எனக் கூறப்பட்டது.

ஜெனரல் ... பொன்நகரில் பேச்சு நடத்துகிருர்.

பிரிட்டனுடன்

## 7 ஆபிரிக்க நாடுகள் ராஜீக உறவைத் துண்டித்தன

லண்டன், டிச. 17

ஐக்கிய அராபியக் குடியரசு, பிரேஸவில்லி காங்கோ, மொரட்டேனியா, மாலி, கினி, கானு, தன்ஸேனியா ஆகிய 7 ஆபிரிக்க நாடுகள் பிரிட்டனுடன் ராஜதந்திரத் தொடர்பை இதுவரை முறித்துக் கொண்டிருக்கின்றன.

ரொடீஷியாபற்றி ஆராய ஆபிரிக்க பெருந்தலைவர்களின் அவசர மகாநாடு ஒன்றை ஸீராலியோன் பிரதமர் அழைத்திருக்கிருர்.

நேற்று ஐ. நா.வில் பிரிட்டிஷ் பிரதமர் உரைநிகழ்த்திய போது 36 ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் வெளிநடப்புச் செய்தார்கள்.

ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டனின் நடவடிக்கைக்கு ஆதரவளிக்குமாறு திரு. வில்சன் உலக நாடுகளை அப்போது கேட்டுக் கொண்டார்.

## உளவு ஏஜெண்டுகள் பற்றி உஷார்!

### மாஸ்கோ வாசிகளுக்கு எச்சரிக்கை

மாஸ்கோ, டிச. 17

தங்களைச் சுற்றியுள்ள ''ஏகாதிபத்திய ஏஜெண்டுகள்'' விஷயத்தில் கவனமாய் இருக்குமாறும், இங்குநடைபெறும் விஷயங்களை அறிவதில் அவர்களது கண்களும், காதுகளும் வேகமாக வேலை செய்து வருகின்றன என்றும் மாஸ்கோ வாசிகள் எச்சரிக்கப்பட்டிருக்கிருர்கள்.

ராஜதந்திரிகள், மாணவர்கள், வர்த்தகர்கள், விஞ்ஞான ஊழியர்கள் என்ற முறையில் அவர்கள் இங்கு வருகிருர்கள் என்றும் சோஷலிஸ்ட் நாடுகளின் ராணுவ, பொருளாதார, மன, அரசியல் பலத்தை பலவீனப்படுத்துவதே அவர்கள் நோக்கம் என்றும் ''மாஸ்கோவ்ஸ்காயா பிராவ்டா'' என்ற பத்திரிகை எச்சரித்திருக்கிறது.

''ரஷ்ய அணுசக்திபலம் தொடங்கி ரஷ்ய ஆலைத் தொழிலாளியின் பெயர் வரை எந்த விஷயத்தையும் அறிவதில் அவர்கள் உஷாராய் இருக்கிருர்கள். கேந்திர ராணுவ அமைப்புகளை அறிந்து, அதைக் குண்டு வீச்சுப் பகுதியாகச் சேர்ப்பது அவர்களது வேலைகளில் ஒன்று.

''பாதுகாப்பு சாதன தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களிடையே இந்த ஏஜெண்டுகள் உறவினர்களையும், நண்பர்களையும் கண்டுபிடிக்க முயல்கிருர்கள். கவலையீனமான ஒரு சிறிய வார்த்தையைக்கூட கிரகித்துக் கொள்ள அவர்கள் தயாராய் இருக்கிருர்கள்'' என்றும் மேலும் அது கூறியிருக்கிறது.

தொடர்ந்து கூறப்பட்டிருப்பதாவது:

''வேண்டுமென்றே அவர்கள் சோவியத் பிரஜைகளுடன் தர்க்கத்திலீடுபட்டு அதன்மூலம் அதிக தகவல்களைச் சேகரிக்கப்பார்க்கிருர்கள். ஒரு பவுண்டன் பேஞ, அல்லது கைக்கடிகாரப்பட்டி ஆகியவற்றில் பொருத்தப்பட்ட மைக்கோடேப் ரிக்கார்டுகள் போன்ற நவீன சாதனங்களை ஏகாதிபத்திய ஏஜெண்டுகள் உபயோகிக்கிருர்கள். 30 அடிக்கு அப்பால் நடைபெறும் சம்பாஷணைகளையும் இதன் மூலம் கேட்க முடியும்.

சோவியத் விஞ்ஞான கூடங்களுக்கு விஞ்ஞான நிபுணர்கள் என்ற பெயரால் ஏஜெண்டுகளை அனுப்பும் புதிய தந்திரம் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தாங்கள் விரும்பும் கேள்விகளைக் கேட்குமாறு அவர்கள் ரஷ்ய விஞ்ஞானிகளைக் கேட்கிருர்கள். இந்தக் கேள்விகளிலிருந்து பல தகவல்களை அவர்கள் அறிந்து கொள்கிருர்கள்.''

(பி டி, ஸி.)

## ஜெமினி 7 தொடரும்

கேப்கென்னடி, டிச. 17

'ஜெமினி 7' கப்பலை ஒரு நாள் முன்னதாகவே பூமிக்குக் கொண்டுவருவதென்ற முடிவை விஞ்ஞானிகள் கைவிட்டு, திட்டமிட்டபடி 14 நாள் சஞ்சரிக்க அனுமதித்திருக்கிருர்கள்.

இதற்கிடையில் பூமிக்குத் திரும்பிய 'ஜெமினி 6' விமானிகள் தங்கள் மூத்த கிரகத்துடன் ஒன்றுசேர்ந்தது பற்றிய வர்ணப் புகைப்படத்தைக் கொண்டுவந்திருக்கிருர்கள். 26 மணி நேரம் சுற்றிய ஷீராவும், ஸ்டப்போர்டும் பெர்மூடாவுக்கு 600 மைல் தெற்கே இறங்கினுர்கள். அவர்கள் இருந்த கிரகம் அப்படியே கப்பலுக்கு எடுக்கப்பட்ட பின், அவர்கள் வெளிவந்தார்கள்.

## நேதாஜி சிலை

சென்னை, டிச. 17

இந்தியாவின் 7 தலைவர்களுக்கு நினைவுச் சின்னங்களாக சிலைகள் அமைக்கப்படும் போது, நேதாஜி சுபாஸ் சந்திரபோஸிற்கும் சிலை எழுப்பப்படும். சரித்திரப் பிரசித்திபெற்ற டில்லி செங்கோட்டைக்கருகில் உருவச் சிலைகள் அமைக்கப்படும்

இத்தகவலை இந்தியவெளிவிவகார மந்திரி திரு. சுவர்ண்சிங் தெரிவித்துள்ளார்.

## ஜம்முவுக்கு ரயில் பாதை

ஸ்ரீநகர், டிச. 17

இம்மாதம் ஜம்முவுக்குஇந்தியாவின் இதரபாகத்துடன் ரயில் பாதைத் தொடர்பு ஏற்படுத்தப்படும் என்றும், 4-ம் திட்ட காலத்திற்குள் காஷ்மீரின் இதர பகுதிகளுக்கும் ரயில் பாதைத் தொடர்புகள் போடப்படுமென்றும் காஷ்மீர் முதல்வர் ஸாதிக் அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊழலை ஒழிக்க புதிய திட்டம்

## ஜனவரி முதல் அமுலாகிறது

பம்பலப்பிட்டி, வெள்ளி

அரசாங்க அதிபர்களினுல் சிபார்சு செய்யப்படும் மொத்த விற்பனையாளர்களுக்கும்' சில்லறை விற்பனையாளர்களுக்கும் மட்டுமே ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உப உணவுப் பொருள்களை வழங்கவிருக்கிறது.

இப்புதிய திட்டம் தற்போதைய ஊழல்களை ஒழிப்பதற்காகவே கொண்டுவரப்படுகிறதென கூ. மொ. வி. இலாகா ஜெனரல் மனேஜர் கே. பி. ஜி. சில்வா. தெரிவித்துள்ளார்.

தற்போதைய விநியோக முறைப்படி கூட்டுறவுப் பகுதி தனது ஆதிக்கத்திலுள்ள பொருள்களான மிளகாய், மைசூர்பருப்பு, கருவாடு, புளி, தகரத்தில் அடைக்கப்பட்ட தகர மீன் ஆகியவைகளை 2000க்குமதிகமான பதிவுசெய்யப்பட்டுள்ள பர்மிட் வைத்திருக்கும் வியாபாரி மூலம் விநியோகம் செய்துவருகிறது.

பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடியதாக தனிப்பட்டோருக்கு இவ்விநியோகம் செய்யப்பட்டுவருகிறது

ஜனவரி முதலாம் திகதி அமுலுக்கு வரவிருக்கும் இத்திட்டம் குறிப்பிடப்பட்ட வரையறுக்கப்பட்ட விலைகளிலே பாவனைப் பொருள்களை விற்பனை செய்ய உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பேட்டி காண முடிவு

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையின் தரத்தை உயர்த்துவதோடு பாடசாலைக்கட்டிடம் ஒன்றைப் புதிதாக அமைக்கவும் வேண்டும் என பெற்றூர் - ஆசிரியர் சங்கத் தூதுக் கோஷ்டி ஒன்று தீவுப்பகுதி எம். பி.யைப் பேட்டி காணவிருக்கிறது.

## பாலியாற்றுக்கு ஒரு பாலம்

துணுக்காய், வியாழன்

துணுக்காய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்ற வவனிக்குளம் இணைப்புக்குழுக் கூட்டத்தில்பாலியாற்றுப்பாலம் பற்றிக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் மிகமுக்கியம் என்றும் மழை காலத்தில் இவ்வாற்றில் பன்னிரண்டு அடிக்கு மேற்பட்ட தண்ணீர் பாய்வதால் வவனிக்குளம் இடதுகரைக் குடியேற்றத்தைச்சேர்ந்த 850 குடும்பங்கள் கஷ்டம் அடைகின்றூர்கள் என்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

## 'பிரதமரின் சேஷ உத்தரவு

### ஜனதின கூறுகிறது

கொழும்பு, வெள்ளி

'ஒப்பந்தம் சம்பந்தமாக, மந்திரிகளோ, எம். பி.க்களோ, எவ்விதகருத்தும் தெரிவிக்கக்கூடாதென பிரதமமந்திரி விசேஷ உத்தரவிட்டுள்ளதாக 'ஜனதின' பத்திரிகையில் செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் சம்பந்தமாக தான் மட்டுமே எந்தவித அறிக்கையும் வெளியிடலாமென்று பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளதாகவும், அவர் இன்னும் ஒரு மாத காலத்தில் ஒப்பந்தம் சம்பந்தமாக ஒரு அறிக்கை வெளியிடுவாரென்றும் அச்செய்திமேலும் கூறுகிறது.

## நாவலர் குருபூசை

வயாவிளான், வெள்ளி

வஸாவிளான் பலாலி தெற்கு இந்துசமய விருத்திச் சங்கத்தினரும் வயாவிளான் மானம்பராய் பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையினரும் கூட்டாக சென்றவாரம் ஆறுமுக நாவலர் குரு பூசையை சிறப்பாகக் கொண்டாடினர்.

ஆறுமுக நாவலரது தொண்டினையும் பெருமை பற்றியும் திருவாளர்கள் சி. இராமலிங்கம், த. நடராசா, ஆயுள்வேத டாக்டர் திரு. இ. கனகலிங்கம், திரு. சி. சுப்பிரமணியர் ஆகியோர் சொற்பொழிவாற்றினூர்கள்.

கோயில் திருப்பணிவேலைகள் ஆரம்பமாகி வேலைகள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டு தான் மகிழ்ச்சி அடைவதாகவும் அதற்கான உதவியை தான் செய்ய காத்திருப்பதாகவும் திரு. த. செல்லப்பா பேசும் பொழுது குறிப்பிட்டார்.

## அபராதமும் சிறையும்

கொழும்பு, வெள்ளி

பல்ப் ஒன்றைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 25 சதம் கூடுதலாக விற்றதற்காக பொறலஸ்கமுவாவைச்சேர்ந்த ஒரு வர்த்தகருக்கு கொழும்பு வடக்கு மாஜிஸ்திரேட் திரு. ஜே. ஜி. எல். சுவாரிஸ் 1500 ரூபா அபராதம் விதித்து, அவர் கோடு முடியும்வரை மறியலில் இருக்கும்படி உத்தரவிட்டார்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை

EGAL--JAFFNA
NOW SHOWING
Cecil Parker
Agnes Laurent
IN
A FRENCH
MISTRESS

இன்று முதல் குதூகல ஆரம்பம்!
நியூ காலிங்கன் சினிமா
(இணுவில்)
தினசரி 2 காட்சிகள்; சனி - ஞாயிறு 3 காட்சிகள்
எம். ஜி. ராமச்சந்திரன் - பி. சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப் பின் பாசம்
பிற்பகல் 2-30 காட்சியுடன் ஆரம்பமாகிறது

9-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி)
மொடேர்ன் (பதுளை) மொடேர்ன் (பண்டாரவளை) விஜயா (அம்பாறை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்னுட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்ன, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
ஈஸ்மென்கலர்

உங்களுக்குத்தேவையான காகிதாதிகளுக்கு
எங்களை நாடுங்கள்
O கடுதாசி பைகள் (விரும்பிய அளவுகளில்)
O சகலவிதமான ரசீதுப் புத்தகங்கள்
O போட்டோ அல்பங்கள்
O ஓட்டோகிருப் அல்பங்கள்
O கடித பாற்றுகள்
O மொனிற்றேர்ஸ் கொப்பிகள் (80,160 பக்கங்கள்)
O வரைதல் கொப்பிகள்
O வரைக்கட்ட கொப்பிகள் (கிருவ்)
O பாஸ் புத்தகங்கள்
O குறிப்புக் கொப்பிகள் (1/4, 1/8, 1/16 அளவுகளில்)
மொத்த தேவைகளுக்கு உடனே எங்களிடம் ஓடர் செய்யுங்கள்.
விபரங்கட்கு:
ஈழநாடு லிமிடெட்
63, சிவன்கோவில் மேலை வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 389
1506

மொரட்டுவ தளபாடங்களுக்கு பெயர்பெற்ற இடம்
அதைவிட, நியாயமான விலையில் தரம் சிறந்த தளபாடங்களை வாங்குவதற்கு புகழ் பெற்ற இடம்
எம். எஸ். பெர்ணுண்டோ அன் கோ
விருந்தை தொடக்கம் குசினி வரைக்கும் அழகு கொடுக்கும் நூற்றுக்கணக்கான மாதிரிகளில் உள்ள தனி, செட் தளபாடங்களில் உங்கள் கண்ணைக் கவரும் ஒரு செட்டைத்தான் கீழே காண்கிறீர்கள்.



நடுவிலே ஒரு மேசையுடனும், அருகில் இரு ஸ்டூல்களுடனும் உல்லாசம் தரும் ஐந்து கதிரைகளுடன் கூடிய
எந்த வீட்டுக்கும் எழில்தரும் இந்தச் செட்டின் விலை 375 ரூபாவே தான்
இன்றே விஜயம் செய்யுங்கள் !
எம். எஸ். பெர்ணுண்டோ அன் கோ,
இல. 32, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
110, காலி வீதி, மொரட்டுவ, இல. 4, இன்டிபெட்டா. மொரட்டுவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
உள்ளூர் ஆட்சிப் பகுதி

என் 2366 துறைநீலாவளை. நெய்ப்பட்டிமுனை சேனைக்குடி ஆகிய பகுதிகளுக்கு குழாய் நீர் விநியோகத் திட்டங்களை நிர்மாணித்தல். கேள்விப்பத்திரங்கள் முடிவுத் திகதி 3-2-66.

கல்விப் பகுதி

என் 2343 வவுனியா / முள்ளியவளை அ. த. க. பாடசாலை, வெள்ளாமுள்ளி வாய்க்கால் அ. த. க. பாடசாலை என்பவற்றின் சேதமுற்ற பாடசாலைக் கட்டடத்தைத் திருப்பிக் கட்டுதல். கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 11-1-66

இதன் முழுவிபரங்களுக்கும் 17-12-65ல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப்பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும் உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 995

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்

உடுப்பிட்டி: 1. ஆறுமுகம் சின்னத்தம்பி, 2. பெண் செல்லாச்சிப்பிள்ளை.
வழக்காளிகள்

இல. 8769

எதிராக

1. உடுப்பிட்டி: குட்டிப்பிள்ளை சின்னையா
2. குட்டிப்பிள்ளை திசைராசா
3. குட்டிப்பிள்ளை துரைராசா
4. ஆறுமுகம் இரத்தினராசா
5. வயிரவிப்பிள்ளை இராமசாமி
6. குட்டிப்பிள்ளை ஐயாத்துரை
7. வீரகத்திப்பிள்ளை இராசதுரை
8. குமரேசு வீரவாகு
9. செல்லையா பூலோகசந்திரன்

எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சி பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று உடுப்பிட்டி இறைபாலாவோடை நி.ப. 791/8 எல்லை கிழக்கு கதிரித்தம்பி முத்துக்குமாருவுக்குடைய வாதனம். வடக்கு சதாசிவம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு வேலுப்பிள்ளை பெண் சீதேவனுக்குடையவாதனம். தெற்கு ஒழுங்கை. இவ்வாதனத்தை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்றுஇத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஆண்டு தை மீ 12ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின்
கட்டளைப்படி
மு. ஸ்ரீ பத்மநாதன்
பிரதம லிகிதர்

1965-ம் ஆண்டு
மார்கழி மீ 17ம் திகதி
1507

## மத்திய நூல் நிலையம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் கிராமசபைத் தலைவர் சுழிபுரம் கிராமசபை வளவுக்குள் ஒரு மத்திய நூல் நிலையம் ஒன்றை அமைக்க இடம் தருவதாக சம்மதம் கொடுத்துள்ளார்.

உள்ளூராட்சிப் பகுதியினருக்கு இதுசம்பந்தமாக ஒரு விரிவான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. விரைவில் நூல்நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியப்படுகின்றது.

## விளையாட்டுப் பகுதி

## சென். மேரிஸைகிறீன்பீல் வென்றது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ''கிறீன்பீல்'' விளையாட்டுக் கழகத்திற்கும் நாவாந்துறை ''சென். மேரிஸ்'' விளையாட்டுக் கழகத்திற்குமிடையே ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற சினேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கிறீன்பீல் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

போட்டி ஆரம்பமாகி 15 நிமிடங்கள் வரை இரு கோஷ்டியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடினர். இடைவேளைக்கு சற்று முன்பாக சென். மேரிஸ் இடது முன்னணி வீரர் ஒரு கோலைப் போட்டார். இடைவேளையின் போது சென். மேரிஸ் ஒரு கோலைப் பெற்றிருந்தது கிறீன்பீல் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமற்கியதும், கிறீன்பீல் முன்னணி வீரர்களும் பின்னணி வீரர்களும் ஒன்றுசேர்ந்து விளையாட ஆரம்பித்ததின் பயனாக முன்னணி வீரர் பி. என். சாள்ஸ் முதலாவது கோலைப் போட்டார். இதன் பின் கிறீன்பீல் விளையாட்டு வீரர்களின் விளையாட்டில் வேகம்காணப்பட்டது. இதனால் சென். மேரிஸ் வீரர்கள் நிலைகுலைந்து விளையாட ஆரம்பித்தனர். இச்சந்தர்ப்பத்தில் கிறீன்பீல் இடது முன்னணி வீரர் அ. தேவராசா இரண்டாவது கோலை மிக வேகமாகப் போட்டார். அதன் பின் சென். மேரிஸ் விளையாட்டு வீரர்களின் விளையாட்டில் முரட்டுத்தனம் காணப்பட்டதினால் இடையிடையே மத்தியஸ்தரின் கண்டனத்துக்கு ஆளானார்கள். விளையாட்டு முடிவடைவதற்கு 8 நிமிடங்களுக்கு முன் சென். மேரிஸ் ஒரு ''பெனல்டியை'' கிறீன்பீலுக்கு கொடுத்தது. இக்கோலை கிறீன்பீல் இடது பின்னணி வீரர் ஏ. எஸ். பத்மநாதன் மிக சாதுரியமாக அடித்தார். போட்டி முடிவடையு போது கிறீன்பீல் 3—1 கோல்களால் அடுத்தடுத்து பல கழகங்களை வெற்றி கண்ட சென். மேரீஸ் கோஷ்டியைத் தோற்கடித்தது. கிறீன்பீல் கோல்காப்பாளர் ரகுநாதன், மத்திய பின்னணி வீரர் மார்ட்டின் ஆகியோரின் விளையாட்டு ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றது.

இப் போட்டிக்கு திரு. இம்மனுவல் மத்தியஸ்தம் வகித்தார்.

உதைபந்தாட்டம்

## கல்விப்பகுதி கோஷ்டியிடம் இ. போ. ச. தோற்றது!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் கல்விப் பகுதி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், இ. போ. ச. கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கல்விப்பகுதிக் கோஷ்டி சிறப்பாக விளையாடி அமோக வெற்றியீட்டியது. போட்டி ஆரம்பத்திலிருந்து முடியும்வரை விறுவிறுப்பாகவும் ரசிப்பாகவும் காணப்பட்டது. போட்டி ஆரம்பமாகிய அடுத்த நிமிடமே இ. போ. ச. கோஷ்டியின் முன்னணி வீரரான சுந்தரலிங்கம் முதலாவது கோலை வெகுலாவகமாகப் போட்டார். இரண்டாவது கோலையும் இவ் வீரரே போட்டார்.

தொடக்கத்தில் கல்விப் பகுதி தளர்ந்து காணப்பட்டபோதிலும் போகப்போக இ. போ. ச.வைச் சுற்றிவளைக்கத் தொடங்கியது. ஒன்றன்பின் ஒன்றாக கோல்களை கல்விப்பகுதி முன்னணிவீரர் வெளுத்து வாங்கினர். வி. ரி. கணேசலிங்கம் கோல்கள் அடிப்பதில் ஒரு புலியாகக் காணப்பட்டார். கல்விப் பகுதியில் ரனிஸ்லோர், தேவபாலசுந்தரம் ஆகிய வீரர்களும் பாராட்டத்தக்க வகையில் கோல்கள் போட்டனர். இடைவேளையின் முன்னர் கல்விப்பகுதியினர் 4 கோல்கள் பெற்றிருந்தனர். இ. போ. ச. 2 கோல்கள் பெற்றிருந்தது.

இடைவேளைக்குப் பின்பும் கல்விப்பகுதியினர் கோல்களைப் போட்டார்கள். இ. போ. ச. முன்னணிவீரான வைத்திலிங்கம் யாரும் எதிர்பாராதவிதமாக ஒரு கோலைப்போட்டார். கல்விப்பகுதியின் பின்னணி வீரரான எம். கிருபாகரனின் திறமையான விளையாட்டே எதிர்க்கோஷ்டியினர் கோல்கள் போடுவதற்கு முடியாமலிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டி முடிவில் கல்விப் பகுதி 7-3 கோல்களால் இ. போ. ச.வைத் தோற்கடித்தது.


புத்தம் புதிய வரவுகள்
கிறிஸ்மஸ் பண்டிகையை
முன்னிட்டு
நைலேக்ஸ்சேலைகள்
மிகவும் மலிந்த விலைக்கு

| | |
|---|---|
| பட்டர் நிநேன் | 33/- |
| பட்டர் நைலேன் | 41/- |
| ஸ்பார்க்கிலிங் நைலேக்ஸ் | 61/- |
| ஜெரி நைலேக்ஸ் | 78-75 |
| டக்கரன் | 31-75 |
| சாமொஸ் | 41-50 |

குறிப்பிட்ட தொகை!
இனி இறக்குமதி இல்லை!
இத்தருணத்தை
தவறவிடாதீர்கள்!
டயறம்ஸ்
54, பெரியதெரு,
யாழ்ப்பாணம்.



டயறம்ஸ்
கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு
சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும்
காலை 9-00 மணி முதல் மாலை 6-00 வரை
திறக்கப்பட்டிருக்கும்
54, பெரியதெரு, :: :: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

தேவை

டயமன்ஸ், லக்ஸ், எஸ்குவயர்சிகரெட்டுகள் சயிக்கிள்களில் சென்று விற்பனை செய்வதற்கு ஆட்களும் பொறுப்பாளி ஒருவரும் தேவை. 4 மணிக்குப்பின் நேரில் விண்ணப்பிக்கவும். நேஷனல் சேல்ஸ் கோப்பறேசன் (விநாயகம் இன்டஸ்றீசுக்கு எதிரில்), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 1604

பெற்றோல் ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர் தேவை. ரொக்கப் பிணை ரூ. 1000/-. ஆங்கில அறிவும் அனுபவமும் உள்ளவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் செய்பவர் கீழ்க்கண்ட முகவரியிலுள்ளவருடன் தொடர்பு கொள்ளவும். இ. மூர்த்தி, 107, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1602

தெல்லிப்பளை தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுசங்கப் பண்டகசாலைக்குப் பொறுப்பாக ஒரு உதவி மனேச்சர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகுதிகளுக்கு அமைவாக மனுப்பண்ண வேண்டும். வயது 21க்கு மேல்-கல்வித்தராதரம் கனிஷ்ட பாடசாலைத் தராதரம் கூட்டுறவுப் பயிற்சி, அனுபவம் பெற்றவர்கள் கவனிக்கப்படும். மாதச்சம்பளம் எல்லாம் உட்பட ரூபா 100/-( பணியாளர் சேமநிதிச் சலுகை உண்டு) உரொக்கப் பிணை ரூபா1000/-. ஆதனப் பிணை ரூபா 2500/-. தராதர நற்சாட்சிப்பத்திரங்களுடன் தலைவர், தெல்லிப்பளை, தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பன்னாலை, தெல்லிப்பளை என்ற முகவரிக்கு 27-12-65க்கு முன் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் மனுப்பண்ணுக. 1499

அக்கராயன் குளம் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் நுகர்ச்சிப்பொருள் விற்பனவுப் பகுதிக்கு ஒரு மனேஜர் தேவை. எஸ். எஸ். ஸி. சித்தியடைந்தவராயும், அனுபவமுள்ளவராயும் இருத்தல்வேண்டும். பிணை: காசாக ரூபா 1000/-, ஆதனமாக ரூபா 2000/-. வயது 35-க்குள். சம்பளம் ரூபா 100/- தொடக்கம் ரூபா 125/- வரை, தகுதிக்கேற்ப கொடுக்கப்படும். உறையில் 'மனேஜர் தேவை' என்று குறிப்பிட்டு 29-12-65 -க்கு முன் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1608

கைத்தறி நெசவு வேலையில் 3 வருட அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் தேவை. சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நேரில் விண்ணப்பிக்கவும். போடிங் வசதிகள் அளிக்கப்படும். இல. 5, ஜும்மா முஸ்லிம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பிட்டா மேல்மாடி). 1498

### Education

BUILDING CONSTRUCTION & DRAUGHTSMANSHIP. Classes in Building Construction and Draughtsmanship including drawing Plans. Sections and Elevations to scale, taking out Quantities and framing Estimates with data commence on the 5th of January 1966 at the COLLEGE OF HIGHER STUDIES, Anaipanthy Jaffna. Apply: Registrar. 1479

விற்பனைக்கு

அரச வீதியில் முத்திரைச் சந்தைக்கு அருகாமையில் வீடு கட்டக்கூடிய, பிரயோசனங்களும், கிணறும் உடைய 3 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. S. மதியாபரணம், 293, செம்மணி றோட், நாயன்மார்கட்டு. 1605

மானிப்பாய் இந்து மகளிர் பாடசாலைக்கு எதிராக யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் காணி 6 பரப்பும், வீடும் விற்பனைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு நேரில் அறியவும். க. நவரத்தினம், மூளைமலை ஒழுங்கை, மானிப்பாய். 1500

நல்ல நிலைமையில்உள்ள CN—A/40 கார் விற்பனைக்கு உண்டு. ரூபா 8500/- மேல் கோருபவருக்கு கொடுபடும். 37, 39, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1490

55 ஸ்ரீ 3115 இலக்கமுடைய டிராக்டர் விற்பனைக்குண்டு விபரங்கட்கு: பொ. சோதிநாதன், 104/2 வெற்றியர் ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம். 1491

100-ம், 120-ம், 160-ம் நம்பர் சேலைகளும், படுக்கை விரிப்புகளும், வேட்டிகளும், 16-12-65 முதல் விற்பனையில் விற்கப்படுகின்றது. மொத்தமாகவோ சில்லறையாகவோ கொடுக்கப்படும். விபரங்களுக்கு: காசிப்பிள்ளை கைத்தறிநிலையம், 17, சப்பல் தெரு, யாழ்ப்பாணம். 1492

வாடகைக்கு அல்லது விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள 'சிங்கப்பூர் கபே' இல: 406, 3 மாடியுள்ள கடை வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: க. நாகமுத்து, கருங்காலி, காரைநகர். 1448

வாடகைக்கு

கிளிநொச்சியில் கண்டி வீதியில் வியாபாரப் புழக்கமுள்ளவிடத்தில் கடையொன்று சகல தளபாடங்களுடன் உடன் வாடகைக்கு உண்டு. விபரத்துக்கு: க. சுந்தரேஸ்வரன், 110, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு தொடர்பு கொள்க. 1494

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்[கி]னும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## பல்கலைக்கழக மாணவர் சிறிமாவைச் சந்தித்தனர்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பல்கலைக்கழக மாணவர் கோஷ்டியொன்று எதிர்க்கட்சித்தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவரது இல்லத்தில் சந்தித்ததாக 'அத்த' பத்திரிகையில் ஓர் செய்தி வெளிவந்துள்ளது.

சர்வகலாசாலை சம்பவங்கள் பற்றி விசாரணைசெய்வதற்காக நியமிக்கப்படவிருக்கும் கமிஷன், பாரபட்சமற்றதாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டுமென அக்கோஷ்டி திருமதி சிறிமாவைக் கேட்டுக்கொண்டதாகவும் அச்செய்தி கூறுகிறது.

# பாக். இராணுவ விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## விமானி பலி; பாரசூட்டில் தப்ப முயன்ற இராணுவமேஜர் கைது

### அமிர்தசரஸில் இந்தியவிமானப் படையினர் நடவடிக்கை

புதுடில்லி, டிச. 16

**இந்திய பிரதேசத்தில் ஊடுருவல் செய்த பாகிஸதான் இராணுவ விமானமொன்றை இந்திய விமானப் படையினர் சுட்டு வீழ்த்தினர்.**

**இந்த விமானம் நொறுங்கி விழுந்தது. விமானி மாண்டுபோனுர். இந்த விமானத்தில் இருந்து உயிர்தப்பிய இராணுவ மேஜர் ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்,**

இந்தச் சம்பவம் இன்று வியாழக்கிழமை காலை அமிர்தசரஸின் தென்மேற்கே நிகழ்ந்தது. பாகிஸ்தான் விமானத்தை கீலர் சுட்டுவீழ்த்தினர்.

''என். 19'' என்ற இந்த பாகிஸ்தான்இராணுவ விமானம் இன்றுகாலை அமிர்தசரஸின் தென்மேற்கே பறந்தபொழுது' ரடார் சாதனம் இதனைக் காட்டியதென்றும் அமிர்தீசரஸில் தரையிறங்குமாறு முதலில் எச்சரிக்கை செய்பப்பட்டதென்றும் ஆனுல் இதற்கு கட்டுப்பட மறுக்கவே ''சுடும் உத்தரவு'' வழங்கப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்திய விமானப் படையைச்சேர்ந்த இருவீரர்களுக்கு இந்த உத்தரவு வழங்கப்பட்டது. ஆனுல் கீலர் இதனை சுட்டு வீழ்த்தினுர். இந்திய பாகிஸ்தான் சண்டையின்போது சாம்ப் அரங்கில் கடந்த செப்டெம்பர் மாதம் மூன்ரும் திகதி பாகிஸ்தான் விமானத்தை கீலர் சுட்டுவீழ்த்தியது வாசக நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

இந்த பாகிஸ்தான் விமானம், வேவுபார்ப்பதிலும், புகைப்படங்கள் பிடிப்பதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாம்.

பாகிஸ்தான் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதும் விமானத்திலிருந்த இராணுவமேஜர் ஒருவர் ''பாரசூட்டில்'' தப்பியோட முயன்றுர் என்றும் ஆனுல் அவர் பின்னர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

பல்கலைக்கழக சம்பவம்

# ஒருவர் கைது

கொழும்பு, வியாழன் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பேராதனைப் பல்கலைக்கழகச் சம்பவம் காரணமாக ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். நான்கு மாணவர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைரேகைகளைக் கொண்டு மாணவர்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர். சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் சந்தேக மாணவர்கள் நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவார்கள்.

இதற்கிடையே பேராதனைப் பல்கலைக்கழக சம்பவத்துக்கு அரசியல்வாதிகளின் தூண்டுதல்கள் காரணமாக இருக்கலாமென்று மந்திரிகள் சிலர் கருதுகின்றனர்.

---

# 'ஜெமினி-6' விண்கப்பல் பத்திரமாகத் திரும்பியது

ஹுவுஸ்டன் (டெக்ஸாஸ்) டிசம்பர் 16 வெளிவான மண்டலத்தில் 'ஜெமினி-7' விண்வெளிக்கப்பலுடன் ஒன்றாக பூவலம்வந்த 'ஜெமினி-6' விண்கப்பல் இலங்கை நேரப்படி இன்றிரவு 9 மணிக்கு மேற்கு அத்லாந்திக்சமுத்திரத்தில் பத்திரமாக இறங்கியது. இக்கப்பல் 'ஜெமினி-7' உடன் 5 மணி 18 நிமிடங்கள் ஒன்றாகப் பிரயாணம்செய்திருக்கிறது,

ஒருகட்டத்தில் இரு விண்வெளிக் கப்பல்களும் வெளிவானில் 4 அடி வித்தியாசத்தில் பிரயாணம் செய்தன. 'ஜெமினி-7' தொடர்ந்து யாத்திரை செய்கிறது.

---

# "இரகசிய ஒப்பந்தம் எமக்கிடையேயல்ல"

— டாக்டர் நாகநாதன்

கொழும்பு, வியாழன் ''கடந்த மார்ச் மாதம் தேர்தல் முடிவுகள் வெளியானதன் பின்னர் திரு. மைத்திரிபால சேனநாயகா திருபதியுதீன்மஹ்மூத், திரு. கலுகல்லே, திரு. இலங்கரத்ன ஆகியோர் என்னிடம் வந்து தமிழர்களின் சகல கோரிக்கைகளேயும் அளிக்க திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தயாராக இருப்பதாகவும், பத்திரிகைகளைப் பொறுப்பேற்கும் முயற்சிகளைக் கைவிடுவதாகவும் கோரி, கூட்டரசாங்கத்தில் தமிழரசுக்கட்சியை சேருமாறு கேட்டனர். ஆனுல் நான் மறுத்துவிட்டேன்'' என்று கொட்டாஞ்சேனையில் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தல் கூட்டமொன்றில் ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் கூறினுர்.

நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதன் பேசுகையில், இரகசிய ஒப்பந்தம், டட்லிக்கும் செல்வாவுக்குமிடையேயல்லவென்றும், ஆனுல் திரு. ஆர். ஜி. செனநாயக்காவுக்கும், திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்குமிடையே தான் இப்படியான ஒப்பந்தமொன்று இருக்கிறதென்றும் கூறினுர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. அனில் முனசிங்கா மற்றும் 6 பேர் என்னிடம் வந்து எல்லாக் கோரிக்கைகளேயும் தமிழருக்குத் தருவதாகவும், தங்களுடன் கூட்டுச்சேருமாறும் கோரினர். நான் வெளியேறுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டேன் என்று டாக்டர் நாகநாதன் சொன்னபோது கூட்டத்தினர் பலத்த கரகோஷம் செய்தனர்.

## தமிழரசு மத்திய செயற்குழுக் கூட்டம்

அச்சுவேலி, வியா.

தமிழரசுக்கட்சியின்செயற்குழுக்கூட்டம் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெறும்.

இக்கூட்டம் மன்னுரில் நடைபெறவிருந்ததாயினும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில்பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள விருப்பதால் யாழ்ப்பாணத்திற்கு மாற்றஞ்செய்யப்பட்டுள்ளது.

## அமெரிக்க கண்காட்சியில் நம்மவர் ஓவியம்

யாழ்ப்பாணம், வெள்ளி சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சித்திர ஆசிரியர் திரு. சி. பொன்னம்பலத்தின் ஓவியம் ஒன்றை 'கிறிஸ்ரியன் யோகா வேர்ல்ட்' என்னும் அமெரிக்க மாதப்பத்திரிகை முன்பக்கத்தில் பிரசுரித்திருக்கிறது.

கிறிஸ்துநாதரை காலஞ்சென்ற அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன் எவ். கென்னடி வணங்குவது போன்ற இந்த ஓவியம் அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஓவியக் கண்காட்சியில் கலந்துகொள்ளவிருக்கிறது.

திரு. பொன்னம்பலம் இலங்கைக் கலைக்கழகத்தில் ஓர் அங்கத்தவராக இருக்கிறுர். இலங்கைக் கலைக்கழகம் நடத்திய ஓவியக் கண்காட்சியில் திரு. பொன்னம்பலம் பரிசுபெற்றுர் என்பது குறிப்பிடத் தக்கது.

---

# பதவி உயர்வுபரீட்சை தமிழிலும் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**பொது எழுதுவினைஞர் சேவையில் நிர்வாக எழுதுவினைஞர் சேவையின் இரண்டாந்தரத்திற்கு பதவி உயர்வு அளிப்பதற்குரிய பரீட்சை அடுத்தாண்டு ஜனவரி மாதம் முதன்முறையாக தமிழிலுல் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்வதாக தற்காலிக பரீட்சாதிகாரி அறிவித்துள்ளார்.**

இப்பரீட்சைமூலம் நிரப்ப வேண்டிய வெற்றுப் பதவிகள் 540 என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இப்பரீட்சை ஆங்கிலத்திலும சிங்களத்திலும் மாத்திரமே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சைக்கு பொது எழுதுவினைஞர் வகுப்பில் நான்கு ஆண்டுகள் திருப்திகரமாக சேவையாற்றிமுடித்தவரும் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவர்களுமே தகைமையுள்ளவர்களாகக் கணக்கிடப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனுல் திறைசேரி நிர். 1/23/2/14 ஜி 10-12-65 திகதியிட்ப்பட்ட சுற்று நிருபத்தின்படி 1-10-64 க்கு முன் பொது எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து நாலு வருடங்களை முடித்துக்கொண்டவர்களுய் சிங்களத்தில் குறிக்கப்பட்ட தகைமை பெருத, உறுதிப்படுத்தப்படாத புதிய அரசாங்க ஊழியர்களும் இப்பரீட்சைக்குத் தகுதியற்றவர்களாகக் கணிக்கப்படுவர் என அறிவிக்கப்படுகின்றது. இச்சுற்றுநிருபம் மேலதிக உதவி திறைசேரி அதிகாரியினுல் கைச்சாத்திடப்பட்டு எல்லா திணைக்களங்களுக்கும் நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இப்பரீட்சையை தமிழில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட நேரத்தில் நிர்வாகவிதி ஒழுங்குச்சட்டங்களும் பொதுசேவை ஒழுங்கு சட்டங்களும் இன்னமும்தமிழில் வெளிவரவில்லை எனத் தெரியவருகிறது.

---

# வர்த்தகருக்கு ரூ. 5000 அபராதம்

## பம்பாய்வெங்காயத்தில் கொள்ளைலாபமடித்தார்

வவனியா, வியாழன் ஒரு ருத்தல் பம்பாய் வெங்காயத்தைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க 15சதம் கூடுதலான விலைக்கு விற்பனைசெய்த வவனியா வர்த்தகர் ஒருவருக்கு ஐயாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உணவுப் பொருள்களில் கொள்ளை லாபமடித்த மற்றும் உணவுப்பொருள்களை விற்க மறுத்த மேலு" 11 வர்த்தகர்களுக்கு வவனியா அரசாங்கஅதிபர் இரண்டாயிரத்து ஐம்பது ரூபா அபராதம் விதித்துள்ளார்.

அபராதத்துக்குள்ளான வர்த்தகர்கள் வவனியா, ஓமந்தை, மாங்குளம் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாகும்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட மொத்தம் 12 வர்த்தகர்களுக்கு ஏழாயிரத்து ஐம்பது ரூபா அபராதம் விதிக்கப்படவிருக்கிறது.

---

# ஐயாறன்

2-ம்பக்கத்தொடர்ச்சி)

வலைக்கு வெளியே வந்து படுத்துவிட்டதாகப் படம் போட்டுள்ளனர்! வெளியில் எவ்வளவு நேரம் அவை விட்டுவைக்கப்போகின்றன! உருவில் சின்னதாயினும், அவற்றிற்குத்தான் எவ்வளவு சாமர்த்தியமும் சக்தியும்!

ஃ ஃ ஃ

மார்கழிஅதிகாலை பஜனைக் கோஷ்டிகள், யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் தெருத்தெருவாக வருகின்றன. கொழும்பு, மலைநாடு உள்ளிட்டு பல பகுதிகளிலும் இக்கோஷ்டிகள் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை முதலியவற்றைப் பாடிக்கொண்டு வருவதையும், இதில் சிறுவர் சிறுமிகள் உற்சாகமாகக் கலந்துகொள்வதையும் பார்க்கையில் மனதுக்கு மிக மகிழ்ச்சியாகவுள்ளது. அவர்களுக்குக் காலையில் தேத்தண்ணீரும், பிரசாதம் முதலியவையும் கொடுப்பதால் பிள்ளைகள் அதிகம்வருவதாகவும் கொழும்பு தட்டாதெரு கோவிலில் பரிசுகளும் கொடுப்பதால்,வேறு மதப் பிள்ளைகளும் இதில் சேர்ந்துகொள்வதாகவும் ஓர் அன்பர் தெரிவிக்கிருர். பசியாற்றுவதன்மூலம் சமயத்தை மக்களிடையே எவ்வளவோ வளர்க்கமுடியும்.

ஃ ஃ

போற்றி என் வாழ்முதல் ஆகியபொருளே, புலர்ந்தது பூங்கழற்கிணை துணைமலர் கொண்டு, ஏற்றி நின் திருமுகத்தெமக்கருள் மலரும், எழில்நகை கொண்டு நின் திருவடி தொழுகோம், சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண்வழல்சூழ், திருப்பெருந்துறையுறை சிவபெருமானே, ஏற்றுயர் கொடி உடையாய் எனை உடையாய், எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

— மாணிக்கவாசக சுவாமிகள்

---

## ஈரவெங்காய ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டு அதிகாரிக்கு பலர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது புளிக்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கூப்பன்கடைகளில் கூப்பனுக்கு அரை அவுன்ஸுக்கும் குறைவாகவே புளி கொடுக்கப்படுகிறது. அந்தப் புளியில் உப்பும், தும்பும், கயிறும் கலந்து உபயோகத்துக்கு ஆகாததாக உள்ளது.

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்ய

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி: 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org